ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி – 2

# தமிழவேள் மாணவர் இதழ்

இதழ் 3 பதிப்பாசிரியர்கள்: முனைவர்.சு.பானுமதி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.க.சுப்புலட்சுமி இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை 2020-2021

## முல்லைப் பாட்டில் வாழ்வியல் சிறப்புக் கூறுகள்

**முன்னுரை :**

பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளுக்கு அடுத்தாற் போல் வரும் அகம் சார்ந்த நூல் முல்லைப் பாட்டு. மிகக் குறைந்த அடிகளாய் (103) அமைந்துள்ளது. இது முல்லை நிலத்திற்குரிய ஒழுக்கத்தைப் பற்றி சொல்லுவதாக அமைந்துள்ளது.

பிரிந்து சென்ற தலைவன் வரும் வரையில் தலைவி ஆற்றிருத்தல் முல்லையொழுக்கம். இந்த முல்லைத் திணையைக் கற்பொழுக்கம் என்றும் சொல்லுவர்.

முல்லை நிலத் தலைவனானவன், தன் தலைவியிடம் தாம் மாரிக் காலத்தில் வருவதாகச் சொல்லிப் பிரிந்து செல்கிறான். ஆனால் மாரிக் காலமும் வந்துவிட்டது தலைமகனைக் காணவில்லை தலைவி வருந்துகிறாள். வருந்துகின்ற தலைவிக்கு அவளுடைய தோழி, செவிலித்தாய் முதலியோர் ஆறுதல் கூறி தேற்றுகின்றனர். தலைவியும் தன் தலைவன் சொன்ன சொல்லைத் தவறமாட்டான் என்று எண்ணி அவன் வரும் வரையிலும் பொறுமையுடன் காத்திருக்கிறாள். இரு நிகழ்வினை எடுத்துக் காட்டுவதாக முல்லைப்பாட்டு அமைகின்றது.

**நூலாசிரியர் :**

முல்லைப் பாட்டின் ஆசிரியர் நப்பூதனார். இவரின் இயற்பெயர் காவேரி பூம்பட்டினத்தின் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவார். இவரின் பெயரால் வேறு

நூல்களோ, பாடல்களோ கிடைக்கவில்லை.

**முல்லைப்பாட்டில் நம்பிக்கைகள் சகுனங்கள் :**

ஒரு வேந்தன் போர் செய்யும் விதமாகவோ, பொருள் ஈட்டும் பொருட்டாகவோ தன் காதலியை விட்டுப் பிரிந்து போகிறான். போகும் போது மறக்காமல் வந்து விடுவேன் என உறுதிமொழி உரைத்துச் சொல்லுகிறான்.

கார்காலம் வந்துவிட்டது தன்னிடம் திரும்பவில்லை என தலைவி எண்ணி வருந்துகிறாள். அவளுடைய நிலையைக் கண்ட அன்னைமார்கள் திருமால் கோவிலுக்குச் சென்று வணங்கி வரம் கேட்டனர். அச்சமயம் வருந்துகின்ற கன்றுகளைப் பார்த்து "தாய்ப்பசுக்கள் விரைவில் வந்நுவிடும்" என்று ஒரு ஆயர்குலப் பெண் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். அச்சொல் வணங்கி வரங்கேட்டுக் கொண்டிருந்த அன்னையர் காதில் விழுந்தது. உடனே தலைவியிடம் வந்து அவளைத் தேற்றும் வகையில் நல்ல சகுனத்தைக் கூறி மகிழவைத்தனர். தலைவி கண்ணீர் விட்டுக் கொண்டு கணவன் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

**முல்லை நிலத் தெய்வம் :**

ஒவ்வொரு நிலத்து மக்களுக்கும் ஒவ்வொரு தெய்வம் உண்டு. அவைபோல் முல்லைக்கு திருமால் தெய்வம். திருமாலின் சிறப்பாக தண்ணீர் கையிலே பட்டவுடன் உயர்ந்து வளர்ந்த திருமாலைப் போல மேகங்கள் காட்சி தருகின்றன. அவைகள் ஓசை அமைந்த குளிர்ந்த கடல் நீரைப் பருகின. வெற்றியுடன் புறப்பட்டன. மலைகளை உறைவிடமாகக் கொண்டு தங்கின. பின்பு அந்த மேகங்கள் விரைவாக வானத்தின் வழியே சென்றன. பெரிய மழையைப் பொழிந்தன என்று மழையை திருமாலுக்கு ஒப்புமை காட்டி சிறப்புடையாக்கிறார் ஆசிரியர்.

**யானைப் பாகர்கள் :**

யானைப் பாகர்கள் யானையை அடக்கப் பயன்படுத்தும் பரிபாஷைகள் வடமொழிச் சொற்கள் அவர்கள் அதைப் படித்துத் தெரிந்து கொண்டவை அல்ல. செவி வழியே கேட்டுத் தெரிந்து கொண்டவை.

**"காவல் நின்ற**

**தேம்படு கவுள சிறுகண் யானை**

**ஓங்குநிலைக் கரும்பொடு**

**கதிர்முடைந்து யாத்த**

**வயல் விளையின் குளகு**

**உண்ணாது, நுதல் துடைத்து**

**அயில்**

**நுனை மருப்பின் தன் கையிடைக்**

**கொண்டெனக்**

**கவைமுட் கருவியின் வடமொழிப்**

**பயிற்றுக்**

**கல்லா இளைஞர் கவளம் கைப்ப"**

**பாசறையில் பெண்கள் :**

பெண்கள் பாசறைக்குச் செல்லும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தது. அரசன் போருக்குப் போகும் போது அவர்களையும் அழைத்துச் செல்வான். அப்பெண்கள் இராக்காலத்தில் அரசனுடைய படுக்கையறையைப் பாதுகாக்கும் காவலர்க்குத் துணை செய்வார்கள். விளக்கு அணையாமல் பார்த்துக் கொள்வர். கையில் வேளாயுதம் வைத்திருப்பர்.

**"குறுந்தொடி முன்கைக் கூந்தல் அம்**

**சிறுபுறுத்து**

**இரவு பகல் செய்யும் திண்பிடி**

**ஒள்லாள்**

**விரவு வரிக்கச்சின் பூண்ட**

**மங்கையர்"**

என பத்துப்பாட்டு கூறுகிறது.

**அந்நிய நாட்டினர் :**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டில் அந்நிய நாட்டினர் பலர் குடிபுகுந்திருந்தனர். அவர்கள் வாணிகர்களாகவும் வாழ்ந்தனர். அரசர்களிடம் பணியாட்களாகவும் வேலை புரிந்தனர். இச்செய்தியை சங்க இலக்கியம் கூறுகின்றது.

கிரேக்க நாட்டினரைத் தமிழர்கள் "யவனர்" என்ற பெயரால் அழைந்தனர். பாசறையில் அரசருக்கு காவலிருந்து யவனர் ஆவார். இதனை,

**"மெய்ப்பைபுக்க வெருவருந்**

**தோற்றத்து**

**வலிபுணர் யாக்கை வன்கண்**

**யவனர்"**

சட்டையணிந்தவர்கள், கண்டோர் நெஞ்சிலே கலங்கத்தை உண்டாக்கும் தோற்றமுடையவர்கள். ஆற்றல் அமைந்த ஆக்கையினர் ஆருக்கும் அஞ்சாத ஆண்மையுடைய கண்ணெஞ்சகர் சென்றனர்.

அரசர்கள் தங்களது அந்தப்புரத்து இரகசியங்களை வெளிப்படாமலிருக்க அந்நிய நாட்டு ஊமையர்களையே காவலாக வைத்திருந்தனர். இவர்கள் "மிலேச்சர்" என்று அழைக்கப்பட்டனர்.

**தலைவி ஆற்றியிருக்கும் நிலை :**

**"மையார் தடங்கண் மடந்தை**

**வருந்தற்க வாள்முனைமேல்**

**நெய்யார் அயிலவர் காணப்**

**பொழிந்த நெடுங்களத்து"**

நீர் கொண்ட கார்மேகமானது போர்களத்தில் கூர்மையான வேற்படை வீரர்கள் காண மழை பொழிந்தது. நின் தலைவர் குறித்த கார்ப்பருவம் வந்தது. ஆகலின் தலைவியின் வருந்தற்கு தேற்றுவதாய் தலைமகன் வருவர் என வற்புறுத்தியுள்ளனர்.

**தலைவன் வெற்றியுடன் மீண்டு வருதல்:**

**"............ வென்று, பிறர்**

**வேண்டுபுலம் கவர்ந்த, ஈண்டுபெருந்**

**தானையொடு**

**விசயம், வெல்கொடி உயரி,**

**வலன்ஏர்பு**

**வயிரும் வளையும் ஆர்ப்ப"**

பகைவரை சென்று, அவர்தம் நிலங்களைக் கவர்ந்த, திரண்ட பெரிய படையோடு, வெற்றிக்கொடி உயர்த்தி, ஊதுகொம்பும், சங்கும் முழங்கத் திரும்புகிறான் தலைவன்.

**முடிவுரை :**

முல்லைப்பாட்டின் முதல் இருபத்து மூன்று அடிகள் கார் காலத்தின் மாலைப் பொழுதையும் தலைமகளது பிரிவாற்றாமையையும் பாடுகின்றன. அடுத்த ஐம்பத்தேழு

அடிகள். பாசறையின் அமைப்பு. தலைவனின் நிலை ஆகியவற்றை எடுத்துரைப்பதாகவும் இதனைத் தொடர்ந்து வரும் ஒன்பது அடிகள் தலைவியின் துயரத்தை மீண்டும் எடுத்துரைக்கிறது. இருபத்தினான்கு அடிகள் மழைக்காலச் சிறப்பையும், தலைவன் திரும்பி வருவனவற்றையும் உணர்த்துகின்றன.

ஜோ.விஜயஜோதி
ஆய்வியல் நிறைஞர்



## தமிழச்சியின் குரல்

துடித்தெழு மானுடா!!

வைத்த அடிகள் யாவும்

புதுமை கலந்த புனிதமே!!

வீரச் செம்மொழி - அது

என்றும் நம் மொழி!

ஓரம் கண்டிடுமோ??

தூரம் ஒளிரும் வைரமே!!

தமிழால் முடியும்..!!

அன்னையே.....உம்

பூவிதழ் விரியும்!!

அள்ளிக் கொடுக்க – நீ

மலரல்ல.... அமுதமே.......

ஓர் ஆனந்த இராகம்

அலைகளிலும் இசைப்பது

ஒலியல்ல......

ஆளுமை உணர்த்தும்

அழகு மொழி நீயே !!

விழித்திடு தமிழா!!

தாழ்மையைத் தவிர்க்க

தட்டி எழுப்பு

உம் திறமையைத் தவிர்க்க

தட்டி எழுப்பு

உம் திறமையை!!

அவன் வளர்த்த

அக்னிக் குஞ்சுகளாய்....

சிகரம் தொட

சிறகடி - பாரினில்

உள்ளதோ??

ஓர் எல்லையடி!!!

மூ.கீர்த்தனா
இளங்கலை மூன்றாமாண்டு
தமிழ்இலக்கியம்

## சிறுகதை
## கஞ்சும் கருப்பட்டியும்

காலையில் கஞ்சிக் கூட்டுக்கு கருப்பட்டி வைத்து சாப்பிட்ட ஒன்பது மணிக்கு உப்பள வேலைவிட்டு வீட்டிற்கு வந்த செல்வி வீட்டில் உள்ள எல்லா வேலைகளையும் செய்து முடிகிறாள்.

பதினோரு வயதிற்கு கீழே உள்ள அந்த மூனு சின்ன பிள்ளைகளும் காலையில் குடித்த கஞ்சியால் பசிதாங்காமல் இருப்பார்களே..... என்ற எண்ணம் மட்டுமே அவள் மனதில், அதில் அவளின் உடம்பு வலிகூட உள் அடங்கிவிட்டது.

மதியத்திற்கு ஏதோ ஒரு குழம்பு வைத்து சோறு கொண்டு கொடுத்து, பிள்ளைகள் உண்டு, பசியாறியதைப் பார்த்து அவளே உண்டுவிட்ட திருப்தி.

பறந்து பறந்து சமையல் செய்து, பிள்ளைகள் சாப்பிட்ட பின், வீட்டிற்கு வருகையில் தளர்ந்த நடை; கல்லு, முள்ளுமாய் உப்பளசேற்றுமாய் மூழ்கிப்போன செருப்பை உத்துப்பார்த்தால் கூட அதன் நிறம் தெரியாத அளவிற்கு கறையால் மறைந்திருந்தது. பாதத்தில் வியர்த்தால் வழுக்கி விழுந்திடலாம்.....சேற்றின் சீற்றத்தால்.....

“நீ சாப்டியா? என்று கேட்கக்கூட நாதியற்றவளாய்! பணம் இல்லாததால் பாசம் வைக்கக் கூட பந்தம் இல்லாதவளாய் பரிதவித்து” நடக்கிறாள். வீட்டிற்கு வந்து சிலநேரம் மதிய உணவு உண்டு உறங்குவாள்,

பல நேரங்களில் அன்றுபோல் விரதமும் எடுத்திருக்கிறாள்.

பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்த சிறு பிள்ளைகளிடம் தன் உடல் மன வேதனையை சொல்லவும் முடியாமல் மனதிற்குள்ளேயே அதனைப் புதைத்துவிட்டு அவர்களுக்கு வேண்டியதைச் செய்துக் கொடுப்பாள். இரவு 9 மணியானதும், குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு உறங்குகின்றனர்.

தூக்கத்தால் அவளின் கண்கள் தன் குடிகார கணவனின் கண்கள் போல் இருப்பினும் அவளால் தூங்க முடியவில்லை.

“காலை 3 மணிக்கு வேலைக்குப் போறதுக்காக தூங்கணும், இப்ப இவன் வந்ததும் நம்மள தூங்கவும் வுடமாட்டானே என்ற பயம் அவள் மனதை வாட்டியது. பயத்திலே புதைந்து போனவள் கண்ணைமூடி தூங்கும் பொழுது,

“செல்வி......செல்வீ.............!

கதவைத் துற!”- என்ற சத்தம்.

நிக்கக்கூட தெம்பில்லாமல் கால்கள் அங்கும் இங்குமாய் நடனம் ஆடுவதைப் போல் தடுமாறி நடந்துகொண்டு குடிபோதையில், எல்லா நாளும் போல அன்றும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் வந்திருக்கும் கணவன்.

அவன் வீட்டிற்குள் வந்ததும் கதவை பூட்டிவிட்டு உள்ளே வருகையில் மணி இரவு பதினொன்றுக்கு மேலாகி இருக்கும். போதையில் அவனின் புலம்பல் சத்தம் செல்வியின் காதில் கேட்டுக்கொண்டே இருக்கும். ஒழுங்காக சாப்பிடாதவள் அந்தப் புலம்பலைக் கேட்பதற்காகவே பூஸ்டீ குடிக்க வேண்டும்.

ஒருவழியாக கொஞ்சநேரம் கழித்து தூக்கத்தால் புலம்பலை நிறுத்துவிடுகிறான். அவளும் தூக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தூங்குகையில் அதிகாலை 3 மணி அலாரம் அடிக்கிறது.

இரவு பொங்குவது காலை வேளைக்கும் வேண்டுமென்று அதிகமாய் சோறாக்குவது வழக்கம்.

எழுந்து வெறும் வயிற்றொடு, ஒரு டிபனில் கஞ்சியும், சிறு கருப்பட்டித்துண்டினை ஒரு பேப்பரில் மடக்கியும் எடுத்துக் கொண்டு உப்பள

வேலைக்குச் செல்கிறாள். வாயில் கொசு போகுதா? ஈ போகுதா? என்ற உணர்ச்சிக்கூட இல்லாமல் உல்லாச போதையில் உறங்குகிறான் கணவன்.

மு.சத்திய பவானி
முதுகலை இரண்டாமாண்டு
தமிழ்இலக்கியம்

## அமுதபாரதியின் ஹைக்கூ கவிதைகளில் கருத்து வெளிப்பாடு

**முன்னுரை :**

"உள்ளக் கருத்துகளின் எழுத்து வடிவமே கவிதை" என்பது போல் தன் உள்ளத்திலுள்ள சிந்தனைகளை வார்த்தையால் வடிப்பது கவிதை. கவிதையானது மரபுக்கவிதை, புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ கவிதை என்று பல்வேறு வளர்ச்சியினை பெற்று வளர்கின்றன. இக்கட்டுரையில் ஹைக்கூக் கவிதைப் பற்றியும், ஹைக்கூ கவிஞர் அமுதபாரதியின் "காற்றின் கைகள்" என்ற கவிதைத் தொகுப்பினைப் பற்றியும் ஆய்வதே நோக்கமாகும்.

**ஹைக்கூ சொல் விளக்கம் :**

ஹை - என்பது ஜப்பானிய அடிச்சொல். இதற்கு அணுத்தூசி, கரு, முழுமையான கரு என்ற பொருள் உண்டு. கூ - என்பதற்கு ஒரு வரி, ஓர் அடி, ஒரு செய்யுள், ஒரு கவிதை என்றும் பொருள் தருகிறது ஜப்பானிய அகராதி. மேலும் ஹைக்கூ என்பது ஒரு கரு போன்றும், உயிரணு போன்றும் உருவாகின்ற கவிதை என்றும் கூறுகிறது.

ஆரம்ப காலத்தில் ஹைக்கூ கவிதையானது ஹொக்கூ என்றே அழைக்கப்பட்டது. பின் ஹைகை என்று திரிந்து ஹைக்கூ என்றாயிற்று. ஹைக்கூ என்ற சொல்லிற்கு இணையாக தமிழில் ஹைகூ, ஹைக்கூ, ஹைய்கு, ஹொக்கு, அய்க்கூ, ஐக்கூ என்ற சொல்லாட்சியும் அதன் வடிவத்தை சுட்டி வண்ணம், துளிப்பா, குறும்பா, சிந்தர், கரந்தடி, மின்பா, அகத்தியக்கவிதை, கடுகு கவிதை, மின்மினிக்கவிதை போன்று பெயர்களாலும் அடையாளப்படுத்தப்படினும், இன்று ஹைக்கூ, ஐக்கூ என்ற சொல்லாட்சியே தமிழ் இலக்கிய உலகில் இடம் பெற்றுள்ளது.

**ஆசிரியர் அறிமுகம் :**

**"தோன்றிற் புகழொடு தோன்றுக**

**அ.ஃ.திலார்**

**தோன்றலின் தோன்றாமை நன்று"**

**(குறள்: 236)**

எனும் வள்ளுவனின் வாக்கிணங்க தோன்றியவர் கவிஞர் அமுதபாரதி அவர்கள். இவரின் ஊர் காஞ்சிபுரம் மாவட்டம் மாமண்டூர், பெற்றோர்- குமாரசாமி, வள்ளியம்மாள் ஆவார்கள். இவர் ஆகஸ்டு 31-ல் 1939-ல பிறந்தார். பல்வேறு புனை பெயரில் கவிதையும், ஓவியமும் புனைத்துள்ளார். அமுதபாரதி, அமுதோன் என்ற புனை பெயர் இவரின் சிறப்பினைத் தெரிவிப்பவையாகும். ஓவியம் வரைதலை தன் தொழிலாக கொண்டவர்.

ஜப்பானிய கவிதை வடிவத்தில் தமிழ்க் கவிதைகள் எழுதும் கவிஞர்கள் சிறந்த முன்னோடியாக திகழ்பவர். "அமுதோன்" எனும் புனைப் பெயரில் புத்தங்களுக்கு அட்டைப்படங்களை வடிவமைப்பர்.

**ஐக்கூ பற்றி அமுத பாரதியின் கருத்து :**

ஐ + கூ = ஐக்கூ (ககர ஒற்று மிகுந்துள்ளது). ஐ என்றால் கடுகு, கூ என்றால் பூமி, கடுகளவு உருவில் சிறியதாக இருந்தாலும் பூமியளவு பரந்த கருத்தினை உள்ளடக்கியது. ஐக்கூக் கவிதை என்கிறார்.

**அமுதபாரதியின் காற்றின் கைகள் :**

ஹைக்கூக் கவிதைகள் அதிக உள்ளுறையைப் பெற்று காணப்படும். ஜப்பானிய கவிதையான ஹைக்கூ அசை எனும் மரபினையும் பின்பற்றி அமைய பெறுவது.

கவிஞர் அமுதபாரதி அவர்கள் தமிழ் அசை மரபின் 5,7,5 என்ற அசை (நேரசை, நிரையசை) வடிவில் அமைந்த ஹைக்கூக் கவிதையே காற்றின் கைகள் என்ற தொகுப்பு.

உதாரணம்,

**"குரைத்$^{1}$தால்$^{2}$ தான்$^{3}$ என்$^{4}$ன$^{5}$ - 5**

**நிலாப்$^{1}$பய$^{2}$ணம்$^{3}$ நீ$^{4}$ளும்$^{5}$ அந்$^{6}$தோ$^{7}$ - 7**

**நட்$^{1}$சித்$^{2}$திர$^{3}$ நாய்$^{4}$கள்$^{5}$" – 5**

இவர் உதய காலங்கள், இணை தேடும் இதயம், மன்மத ராகங்கள் போன்ற மரபுக் கவிதைகளும், புள்ளிப்பூக்கள், ஐக்கூ அந்தாதி, ஐக்கூ அருவி, ஐக்கூ கவிதைகள் போன்ற ஐக்கூக் கவிதைகளையும் படைத்துள்ளார்.

**காற்றின் கைகளில் சில கருத்து வெளிப்பாடு :**

**இயற்கை பற்றி**

**சமுதாயம் பற்றி**

**வாழ்க்கைத் தத்துவம்**

**சமுதாயம்**

சமுதாயச் சிந்தனைகள் அமுதபாரதியின் ஹைக்கூவில் இடம்பெற்றுள்ளன.

**இயற்கையும் மாணவர் நிலையும் :**

**ஏன் இந்த அமைதி**

**தேர்வா மரங்கட்கு? நாளை**

**மதிப்பெண்களாய் மலர்கள்!**

மரங்கள் அமைதியாய் இருக்கின்றன. இவைகளுக்கு தேர்வா என்ன? ஆம் எனில் அவைகளுக்கு மலர்கள் மதிப்பெண்ணாய் கிடைக்கும். இதில் உள்ளுறையாய் மாணவரின் நிலையை அறியலாம் மாணவர்கள் தேர்வில் அமைதியாய் இருப்பார்கள். அவர்களின் மதிப்பெண்கள் பரிசாய் (மலராய்) பின்வரும் என்பதை உணர்த்துகிறார்.

**நடக்க முடியாமல்**

**தாரை தாரையாய் கண்ணீர்**

**மலை வடிக்கும் அருவிகள்**

மலையிலிருந்து அருவி வழியே நீர் வருவது இயற்கை. ஆததால் இவர் மலையை உயிருள்ளவையாக எண்ணி அவை நடக்க முடியாத காரணத்தால் வடிக்கும் கண்ணீரே அருவி என உவமையாகக் கூறுவர் இவரின் கவித்திறனாகும்.

**சாதிப்பிரிவுகள் :**

**மண்ணின் மேனியெங்கும்**

**மானிட சாதியின் வக்கரிப்பு**

**வயல் பிரிக்கும் வரப்புகள்**

மண்ணிலுள்ள மானிட பிறப்புகள் சாதியென்ற வரப்பினை வகுத்து வாழ்வதை காண்பிக்கிறார்.

**சாதிகள் இல்லையடி பாப்பா – குலம்**

**தாழ்த்தி உயர்த்தி சொல்லேல் பாவம்**

எனும் பாரதியின் குமுறலை நமக்கு நினைவுப்படுத்துகிறார் கவிஞர் அமுதபாரதி அவர்கள்.

**வரதட்சணை :**

கவிஞர் வரதட்கணைப் பற்றி பல்வேறு கவிதைகள் எழுதியுள்ளார்.

**"தோணி வருகிறது**

**துள்ளிய மீன்களுடன் துடுப்புமாய்**

**கரையிலே ஏலம் இனி"**

இவை மீனவர்களின் வாழ்வினை எடுத்துரைப்பதாகவே இருக்கின்றன. எனினும் இதன் உள்ளுறையாக தோணியாக மாப்பிள்ளை, மீன், துடுப்பாய் உறவினர்கள் பெண் பார்க்க வருகின்றனர். ஏலமாக வரதட்சணை ஏலம் நடைபெறுகிறது என்பதை விளக்குகிறார்.

**முடிவுரை :**

கவிஞர் அமுதபாரதியின் காற்றின் கைகள் எனும் கவிதைத்தொகுப்பில் உலக விஷயங்கள் அனைத்தும் காணப்படுகின்றன. ஹைக்கூக் கவிதையின் முறையான 5,7,5 என்ற அசை அமைப்பு முறையும் காணப்படுகிறது. மேலும் இவர் இக்கவிதையில் அதிக அளவில் உள்ளுறையை கையாண்டுள்ளார். சமூகச் சிந்தனைகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.

சு.காளீஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்

## சொல்லாத என் வார்த்தைகள்

உலகில் என்னைப் படைக்க

வேண்டாமென்று இறைவனிடம்

சொல்லாமல் விட்டுவிட்டேன்

பத்து மாதம் இருக்கையில்

படுத்துறங்க இருக்கை

வேண்டுமென்று

சொல்லாமல் விட்டுவிட்டேன்.....

பத்து உடை போட்டு விடும்போது

எனக்குப் பிடித்த உடை வேறேன்று

சொல்லாமல் லிட்டுவிட்டேன்....

கல்லூரிக் காலத்தில் காய்த்த
முதல் காதலை அவளிடம்
சொல்லாமல் விட்டுவிட்டேன்.....

வேலைக்குச் செல்லுகையில்
எனக்குத் திறமை உள்ளதைச்
சொல்லாமல் விட்டுவிட்டேன்

என் மரணப் படுக்கையிலும்
நான் யாரென்று சொல்ல
நினைத்தைச்
சொல்லமல் விட்டுவிட்டேன்....

நான் சொல்லாமல் விட்டதை
எல்லாம் மீண்டும் சொல்ல
இன்னொரு பிறவி
வேண்டுமென்பதை இறைவனிடம்
சொல்லாமல் விட்டுவிட்டேன்...

இந்த கவிதையை யாரும் வாசிக்க
வேண்டாம் என்பதை சொல்லாமல்
விட்டுவிட்டேன்....

சா.முத்துக் கல்யாணி
இளங்கலை மூன்றாமாண்டு
தமிழ்இலக்கியம்